இதிலே மையக் கருத்தாகிய வெளி நடப்பிற்கான காரணம் சரி என்று தெளிவானதை அறவே மறைத்து, முன்னவர் உறுதிமொழி அளிக்கவில்லை என்ன வரையில் முடித்து, அது உண்மையா அல்லவா என்பது சட்டசபையில் வெளியான விவரம் அப்படியே இந்தப் பத்திரிகை மறைத்திருப்பது வேண்டுமென்றே செய்த காரிய மாகும். இது திட்டமிட்டு நாட்டு மக்களுக்குத் தவறான தகவலைத் தந்து, அவர்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் அமைந்திருக்கிறது. இது இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். ஆகவே, இதனை நாங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி, விசாரிக்க வேண்டுமென்று கேட்டு, இதனை அவையிலே எழுப்புவதற்கு தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

(ஆ) 'மாலை முரசு', 'அண்ணா', 'தினமணி' நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் போன்று மாண்பு மிகு உறுப்பினர்கள் து. புருஷோத்தமன், ஏ. ரகுமான்கான், செஞ்சி என். இராமச்சந்திரன் ஆகியோர் முறையே மாலைமுரசு, தினமணி, அண்ணா பத்திரிகைகள் மீது கொடுத்திருக்கிருர்கள். சம்பந்தப்பட்ட பத்திரிகைகளிடமிருந்து விளக்கம் கேட்ட பிறகு என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. ஏ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். 184-வது விதியின் கீழ் நான் ஒரு பிரச்சனையை எழுப்பியிருக்கி கிறேன். அது இன்னும் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங் கள். அது முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, என்றைக்கு எடுத்துக் கொள்வது என்பது முடிவு செய்யப்படும். இப்படி தின்சரி அதைப்பற்றிக் கேட்டால் எப்படி? ஏதாவது தெரிய வேண்டுமானல் என்னுடைய அறையில் வந்து கேளுங்கள்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருவெறும்பூர் பாரத் கனரக மின்கல தொழிற்சாலையில் உள்ளிருப்பு வேலை நிறுத்தமும் சில தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கமும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் பாரத் கனரக மின்கலத் தொழிற்சாலை குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். அது இந்த அவையின் இதர